முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS எண்.35/2018**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 05.09.2023 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.S.Suganiya Sri, B.A.B.L.,(Hons),M.L.,PGDAML. அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 05.09.2023 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | ஜீவா | வயது.. | 62 |
| தந்தை பெயர்.. | திரிசங்கு | கிராமம்.. | பொறையார் |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி 1,2,3,4 தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனது தாயார் காமாட்சிக்கு எந்த ஆண்டு திருமணம் நடந்தது என்றால் எனக்கு தெரியாது. எனது தாயாருக்கு எங்கு திருமணம் நடந்தது என்றால் பழனி முருகன் கோவிலில். பொதுவாக கோவிலில் திருமணம் நடந்தால் பதிவேட்டில் குறிப்பிடுவது வழக்கம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தாயார் எந்த வருடம் இறந்தார் என்றால் 1959-ல். எனது தாயார் எந்த ஊரில் இறந்தார் என்றால் சிதம்பரம் முத்து மாணிக்க நாடார் தெருவில் இறந்தார். எனது தாயார் இறந்ததை பதிவு செய்துள்ளோமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1959-ல் நான் பிறந்தவுடன் எனது தாயார் இறந்துவிட்டார். நான் 1959-ல் எந்த மாதத்தில் பிறந்தேன் என்றால் ஜீன் மாதம். நான் பிறந்ததை பதிவு செய்துள்ளேனா என்றால் இல்லை.

2. நான் எந்த பள்ளியில் படித்தேன் என்றால் சிதம்பரம் சீனிவாசா ஆரம்ப பள்ளியில் படித்தேன். நான் பள்ளியில் படித்த சான்றிதழ்கள் உள்ளதா என்றால் எனது தகப்பனாரிடம் உள்ளது. எனக்கு திருமணம் நடக்கும்போத எனது தகப்பனார் உயிருடன் இருந்தாரா என்றால் இருந்தார். என்னுடைய திருமண பத்திரிக்கை உள்ளதா என்றால் உள்ளது. 2 ம் வாதி உமைய பார்வதியின் குமாரர் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் 2 ம் வாதி நீதிமன்றம் வந்துள்ளாரா என்றால் வந்ததில்லை. 2 ம் வாதி எங்கு வசித்து வருகிறார் என்றால் முத்து மாணிக்க தெருவில். 2 ம் வாதி குடியிருக்கும் வீட்டின் கதவு எண் தெரியுமா என்றால் தெரியாது. அது அவருக்கு பாத்தியமான வீடா என்றால் உமைய பார்வதியின் வாரிசுதாரர்கள் அனைவருக்கும் பொதுவான வீடு. 5,6 பிரதிவாதிகள் 2-ம் வாதியின் சகோதர சகோதரிகள் என்றால் சரிதான்.

3. 2ம் வாதி எதுவரை படித்து உள்ளார் என்றால் 10ஆம் வகுப்பு. 2ம் வாதி சுமார் 5-6 வருடங்களாக மனநிலை பாதிக்கப்பட்டுள்ளாரா என்றால் தோற்றத்தில் அவ்வாறு தெரிவார் ஆனால் நன்றாக தான் உள்ளார். பிராதில் 2ம் வாதி எந்த இடத்தில் கையெழுத்திட்டார் என்றால் வழக்கறிஞர் வீட்டில். அதன் பிறகு 2ம் வாதி வழக்கை நடத்த வந்தள்ளாரா என்றால் இல்லை, வழக்கறிஞர் அழைக்கவில்லை. 2ம் வாதி நீதிமன்றத்திற்கு வந்தால் சாட்சியம் அளிப்பாரா என்றால் அளீப்பார். 2ம் வாதியின் வயது தற்போது 55 வயது இருக்கும், திருமணம் ஆகவில்லை. 5,6 பிரதிவாதிகளின் இளைய சகோதரர் தான் 2ம் வாதி. 5, 6 பிரதிவாதிகளுக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் ஆகிவிட்டது. 6ம் பிரதிவாதி என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் விவசாயம்.

4. எந்த இடத்தில் விவசாயம் செய்து வருகிறார் என்றால் சிவபுரி கிரமாத்தில் உள்ள அவருக்கு சொந்தமான இடத்தில். அது அவர் தனிப்பட்ட சொத்தா என்றால் இல்லை, பூர்வீகசொத்து. எவ்வளவு விஸ்திரணத்தில் விவசாயம் செய்து வருகிறார் என்றால் 10 ஏக்கர். அந்த சொத்தில் எனக்கு உரிமை உள்ளது என்றால் இல்லை, ஆண் வாரிசுக்கு தான் சொத்து. எனது தம்பி மோகனுக்கு அந்த சொத்தில் பங்கு உள்ளதா என்றால் அவர் உயிருடன் இருந்தால் பங்கு இருக்கும் தற்போது அவர் இறந்துவிட்டார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணம் தான் உமையபார்வதிக்கும் நடராஜநாடாருக்கும் நடந்த திருமண பத்திரிக்கை தான் என்றால் சரிதான்.

5. வா.சா.ஆ.2 ஆவணமான நடராஜன் வாரிசு சான்றிதழ் வட்டாச்சியர் வழங்குவதற்கு முன்னாள் சேஷம்மாள் குடுப்பத்தினரை விசாரணை செய்தார்களா என்றால் எனக்கு தெரியாது ஆனால் தின சரி நாளிதழ்லில் விளம்பரம் கொடுத்தோம். யார் விளம்பரம் கொடுத்தார்கள் என்றால் நானும் மோகனும். என்ன விளம்பரம் கொடுத்தோம் என்றால் நானும் மோகனும் மட்டும் தான் வாரிசு என்று விளம்பரம் கொடுத்தோம். எனது தாயார் இறந்த பின்பு தாயாரின் வாரிசு சான்றிதழ் வாங்கினோமா என்றால் தெரியாது. சேஷம்மாள், பாலசுந்தர நாடார், ராதா, ஆனந்தி இவர்கள் தான் நடராஜநாடாரின் உண்மையான வாரிசு என்ற நிலையில் அதனை மறைத்து வா.சா.ஆ.2 ஆவணத்தை பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல.

6. சேஷம்மாளுக்கும் நடராஜநாடாருக்கும் சிதம்பரம் மாரியம்மன் கோவிலில் 1965-ல் திருமணம் நடந்ததா என்றால் தெரியாது. திருமணத்திற்கு பிறகு சேஷம்மாளும் நடராஜநாடாரும் முத்துமாணிக்க நாடார் தெருவில் வசித்து வந்தார்கள் என்றால் இல்லை. வா.சா.ஆ.4-ல் ஏற்படுத்தப்பட்ட 26.12.1991 தேதியிட்ட கிரணத்தை பற்றிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.4, வா.சா.ஆ.5 ஆவணத்தில் உள்ள சொத்துக்கள் எங்களுக்குள் பாகம் ஆகிவிட்டதா என்றால் பாகபிரிவினை செய்யப்பட்டது.

7. வா.சா.ஆ.4, 5 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்துவிவரத்தில் மொத்தம் எவ்வளவு விஸ்திரணம் என்றால் தெரியாது. அந்த சொத்தில் எனக்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டது, 6ம் பிரதிவாதிக்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டது என்றால் தெரியாது. எனக்கும் மோகனுக்கும் ஒரு பங்கு என்றாலும், உமையபார்வதியின் வகையறாவிற்கு 1 பங்கு என்றாலும் சரிதான். இந்த சொத்தை விற்பதற்காக தான் நடராஜநாடாரின் வாரிசு சான்றிதழ் கோரப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4, 5 கிரயம் எவ்வளவு ரூபாய்க்கு கொடுக்கப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. சேஷம்மாள் குடும்பத்தினருக்கும், வா.சா.ஆ.4, 5-ல் குறிப்பிட்டுள்ள சொத்தில் உரிமையிருக்கும் பட்சத்தில் அதை மறுத்து கிரயம் கொடுத்துள்ளோன் என்றால் சரியல்ல.

8. வா.சா.ஆ.4, 5-ல் ஆவணத்தில் கண்ட சொத்துக்களை விற்ற பிறகு வழக்கு சொத்தில் உரிமை கோர வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4, 5 ஆவணத்தில் குறிப்பிட்ட சொத்துக்களில் எந்த உரிமையும் இல்லாத நிலையில் அதனை கிரயம் கொடுத்தது தவறு என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதியின் பிறப்பு சான்றிதழை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. நடராஜ நாடார் இறந்த பிறகு 1 முதல் 4 பிரதிவாதிகள் தான் நடராஜ நாடாரின் உண்மையான வாரிசு என்றால் சரியல்ல, 1,2 வாதிகள், 5,6 பிரதிவாதிகள் நடராஜ நாடாரின் உண்மையான வாரிசு இல்லை என்றால் சரியல்ல. நடராஜ நாடார் இறந்த பிறகு 1,2,4 பிரதிவாதிகள் 3ம் பிரதிவாதிக்கு 17.11.2011-ல் வழக்கு சொத்து சம்மந்தமான விடுதலை பத்திரம் ஏற்படுத்தப்பட்ட விவரம் எனக்கு தெரியும் என்றால் இல்லை, தெரியாது.

9. வழக்கு சொத்து 3ம் பிரதிவாதிக்கு தான் பாத்தியம் என்றால் சரியல்ல. சிதம்பரத்தில் வேறு சொந்த வீடு உள்ளதா என்றால் இல்லை. நான் நடராஜ நாடாரின் வாரிசு இல்லை என்றாலும், உமைய பார்வதி நடராஜ நாடாரின் மனைவி இல்லை என்றாலும் சரியல்ல.

**சாட்சி விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Principal District Munsif
Chidambaram